# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## S.C. NO.107/2014

**21.07.2023 - அ.சா. 1 பாலு மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

பாபு இறப்பதற்கு முன்னர் எதிரிகளுக்கும் எங்களுக்கும் வீட்டு மனை பிரச்சனை முடிந்து விட்டது. நான் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கும் போது 1வது எதிரி சுந்தரமூர்த்தியை காவல் நிலையத்தில் பிடித்து வைத்திருந்தார்கள். நான் புகார் கொடுக்கும் போது சுந்தரமூர்த்தி தான் குற்றவாளி என்று காண்பித்தேன். போலீசார் அவரை கைது செய்தார்கள். சுந்தரமூர்த்தி காவல் நிலையத்தில் இருக்கும் போதோ சா.பொ.1 கத்தியை நான் காண்பித்து நான் கொடுத்து விட்டேன்.

கோபால் மனைவி மலர்கொடி எங்கள் ஊர்க்காரர். அவர் இறந்து விட்டார். கோபால் அவர் மனைவியை அடித்து கொன்று விட்டதாக என் மீதும் என் பிள்ளைகள் மீதும் வழக்கு போட்டு இருந்தார் என்றால் சரிதான். மலர்கொடி இறந்த பிறகு பிரேதம் தெரியாத அளவிற்கு கொளுத்தி விட்டார்கள் என்று சொன்னால் சரிதான். அந்த சமயம் என்னையும் பாபுவையும் போலீசார் விசாரணை செய்தார்கள் பின்னர் அனுப்பி விட்டார்கள்.

எங்கள் ஊரில் இருந்து 4 கி.மீ தூரத்தில் கூடலூர் உள்ளது. என் மகன் இறந்து போன பாபு இரு சக்கர வாகனத்தில் சென்று ஒரு பெரியவர் மீது மோதியது சம்மந்தமாக அந்த ஊர்காரர்கள் அடித்து விட்டார்கள் என்று சொன்னால் சமாதானமாக போய் விட்டோம். கூடலூரில் அந்த பெரியவரின் குடும்பத்தாருக்கும், என் மகனுக்கும் விரோதம் இருந்து வந்தது என்றால் சரியல்ல. பாபுவின் நண்பர் குணசேகரன் என்பவர் விஜயகாந்த் கட்சியில் இருந்தார் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் நண்பர்கள் என்று சொன்னால் சரியல்ல. போக வரும் போது பேசுவார்கள். பாபுவிற்கும், குணசேகரனுக்கும் தகராறு ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

பாபுவின் மனைவி சரளாவிற்கும், குணசேகரனுக்கும் கள்ள உறவு சம்மந்தமாக பாபுவிற்கும், குணசேகரனுக்கும் தகராறு இருந்தது என்றால் சரியல்ல. இறந்து போன பாபுவிற்கு நிறைய பேருடன் விரோதம் என்று சொன்னால்

சரியல்ல. என் மகனின் இறப்பு மற்ற நபர்களின் விரோதத் தன்மையால் ஏற்பட்டது என்றும், எதிரிகளுக்கும் என்மகன் இறப்பிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என் மகன் இறந்த தேதி தெரியும்.

இறந்த தேதியன்று போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் அன்றைய தேதியிலேயே பெற்றார்கள். போலீசார் நான் புகார் கொடுத்த அன்றே விசாரணை செய்தார்களா என்றால் மறுநாள் விசாரணை செய்தார்கள். அதன் பிறகு என்னை விசாரிக்கவில்லை. என்னை வீட்டில் வைத்து போலீசார் விசாரணை செய்தார்கள். அப்போது என் மகன் மருத்துவமனையில் இருந்தார். வீட்டிற்கு கொண்டுவரவில்லை. நான் வீட்டிற்கும் மருத்துவமனைக்கும் அலைந்து கொண்டு இருந்தேன்.

மருத்துவமனைக்கு சென்று மருத்துவர் இறந்து விட்டதாக சொன்ன பிறகு தண்டராம்பட்டு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தேன். புகார் கொடுத்த அன்று என்னை விசாரிக்கவில்லை. மறுநாள் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள் அதில் நான் கையெழுத்து போட்டேன். அந்த கையெழுத்து தான் புகாரில் உள்ள கையெழுத்தா என்றால் ஆம். வாக்குமூலத்தை என் வீட்டில் படித்து காட்டிய பிறகு தான் நான் கையெழுத்து போட்டேன். என்னுடைய வீடு வடக்கு தெற்கு அமைந்த வீடு அது என் பெயரில் உள்ளது.

நான் குடியிருக்கும் வீடு தெற்கால் 50 அடி தூரத்தில் உள்ளது. என் சின்ன மகன் வடக்கால் உள்ளார். அதன் மத்தியில் கிழக்கு மேற்காக ஒரு தெரு போகிறது. அதே தெருவில் தெற்கே ஒரு தெரு பிரிகிறது அந்த தெருவில் தான் சம்பவம் நடைபெற்றது. சம்பவம் நடந்ததாக சொல்லும் வீடு என் சின்ன பையன் வீடு அங்கு தான் நான் உட்கார்ந்து இருந்தேன். நான் உட்கார்ந்து இருந்த வீட்டில் இருந்து வீரசாமியின் வீட்டை நேரடியாக பார்த்தால் தெரியாது என்று சொன்னால் என் வீட்டை விட்டு வெளியே வந்து பார்த்தால் தெரியும். என் மகன் பிரபு வீட்டில் நானும் என் மனைவியும் உட்கார்ந்து இருந்தோம்.

நான் கொடுத்த புகாரில் நானும் என் மனைவியும் பிரபு வீட்டில் உட்கார்ந்து இருந்தோம் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொன்னேன். நான் போலீசாரிடம் சொல்லவில்லை ஆனால் புகாரை எழுதிய ஊர் ஆளிடம் சொன்னேன். புகாரில் அவ்வாறு எழுதவில்லை என்றால் எனக்கு படிக்கத்

தெரியாது. படித்துக் காண்பித்தார்கள் அவ்வாறு இருந்தது. நான் கொடுத்த புகாரில் சம்பவ காலத்தில் நான் மட்டும் வீட்டில் இருந்தாக எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் இரண்டு பேருமே உட்கார்ந்து இருந்தோம். நான் போகும் போது குத்தினான். வேண்டாம், வேண்டாம் என்று நான் கத்தினேன், என்னையும் அவர் குத்த வந்தான். கத்தியை எடுத்துக் கொண்டு ஓடிவிட்டான்.

யார் குத்தியது என்று என் மகனிடம் கேட்கவில்லை அவனும் சொல்கின்ற நிலையில் இல்லை, அவன் உயிருக்கு போராடிக்கொண்டு இருந்தான். அவன் நிலைமை தவறியிருந்ததால் எப்படி சம்பவம் நடந்தது என்று கேட்கமுடியவில்லை. என்னுடைய புகாரிலும், வாக்குமூலத்திலும் என் மகனின் இடது கழுத்தில் காயம் இருந்ததாக சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. நெற்றி, இடது புறம், கழுத்து பின்புறம் வளைத்து வளைத்து குத்தி வைத்திருந்தான். நான் மகனை புரட்டி போட்டு காயத்தை பார்க்கவில்லை, உடனே அவரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன்.

புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் முதுகின் இடபுறம் காயம் உள்ள விவரத்தை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. வீராசாமி வீட்டின் முன்பு என் மகன் வெட்டுப்பட்டு இருக்கும் போது நான் ஓடிச் சென்று பார்த்தேன் என்று சொன்னால் சரியல்ல. என் மகன் பாபு வீராசாமி வீட்டின் தின்னையில் உட்கார்ந்து கொண்டிருக்கும் போது 1ம் எதிரி கத்தியால் குத்திவிட்டு இருக்கிறான்.

நான் கொடுத்த புகாரின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் நகலை நான் காவல் நிலையத்தில் வாங்கியுள்ளேன். நான் கொடுத்த புகாரிலும், முதல் தகவல் அறிக்கையிலும் 2, 3 எதிரிகளின் பெயரை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். முதல் எதிரியின் மீது தான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 2, 3 எதிரிகளின் பெயரைச் சொன்னேன் அவர்கள் எழுதாமல் விட்டு உள்ளார்கள். ஊரார் 2, 3 எதிரிகளை சேர்க்கசொல்லி போக்குவரத்தை தடை செய்த பிறகு போலீசார் அவர்களை சேர்த்தார்கள். அதன் பிறகும் 2, 3 எதிரிகளை முதல் தகவல் அறிக்கையில் சேர்க்கப்படவில்லை என்று சொன்னால் எனக்கு படிக்கத் தெரியாது.

1ம் எதிரி என் மகனை தாக்கி என் மகன் கீழே விழுந்த பிறகு 2, 3 எதிரிகள் ஓடி வந்து ஒருத்தனை சாய்த்து விட்டேன் இதே போல் உன்னையும்

சாய்க்காமல் விடமாட்டேன் என்று கூறினார்கள். மேற்சொன்ன விவரத்தை என்னுடைய புகாரிலும், போலீசார் விசாரணையிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. 2, 3 எதிரிகள் உன்னை குத்தாமல் விடமாட்டேன் என்று கூறியதை என்னுடைய புகாரிலும், போலீஸ் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் கிட்டே சென்ற போது வேண்டாம் என்று கூறினேன் என்ற விவரத்தை என்னுடைய புகாரிலும், விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் மகனை நான் மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் போது அண்ணாமலை மற்றும் மாணிக்கம் வந்து மிரட்டியதாக சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான்.

நான் கொடுத்த புகாரில் என் மனைவி மற்றும் மருமகள் சம்பவ இடத்திற்கு வந்து சம்பவத்தை பார்த்தார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. என் மகனுக்கு ஊரில் ஏகப்பட்ட விரோதம் என்றும், எதிரிகளின் முன் விரோதம் காரணமாக அவர்கள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அவர்களின் வீட்டை அபகரிப்பதற்காக அவர்களை இவ்வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒம்/- பாலு

Taken down by me in Open Court read over ot the witness and to knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.